# வெற்றிடங்கள்

## தேசிய கல்வி நிறுவகம் – மஹரகம

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சேவை தரத்தில் விரிவுரையாளர்/ கல்வியியலாளர் - II தர பதவிகளில் உள்ள வெற்றிடங்களுக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பில் மேலதிக விபரங்களை தேசிய கல்வி நிறுவகம் www.nie.ac.lk என்ற இணையதளத்தில் இருந்து “News & Events” ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும்.

குறித்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மேலுள்ள இணையதளத்தில் தரப்பட்டிருக்கும் https://rp.nie.ac.lk என்ற இணையதளத்திற்கு (Link) பிரவேசித்து ஒன்லைன் முறையில் விண்ணப்பப் படிவத்தை முறையாக பூர்த்தி செய்து அனுப்பிய பின் தரவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியை பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், த.பெ. 21, ஹைலெவல் வீதி, மஹரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.02.08 ஆம் திகதி அல்லது இந்தத் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் திணைக்களம் மற்றும் குறித்த துறையை குறிப்பிடுதல் வேண்டும்.

கருத்தில் கொள்ளவும் - அரச கூட்டுத்தாபனம்/ சபை/ திணைக்களம்/ சட்டரீதியான நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் மேலுள்ளவாறு அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்களின் நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் பதவியின் கடமைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமை இருத்தல் வேண்டும் என்பதோடு நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும். (என்றபோதும் உங்களின் நிரந்தர பணி இடம் இலக்கம் 21, ஹைலெவல் வீதி, மஹரகம/ ஹைலெவல் வீதி மீப்பே ஆகும்.)
- விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ்/ கல்வி/ தொழில்முறை சான்றிதழ் மற்றும் சேவை சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.
- ஒரு விண்ணப்பதாருக்கு அனுப்ப முடிவது இரு விண்ணப்பங்களை மாத்திரமாகும்.
- இது நிரந்தர பதவி ஒன்றாகும். தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் தமது சம்பளத்தில் 8% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதோடு, நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% பங்களிப்புச் செய்யும்.
- அடிப்படைச் சம்பளம் தவிர, மற்ற அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் நிறுவனத்தினால் செலுத்தப்படும்.
- தேசிய கல்வி நிறுவகத்தின் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.
- ஒவ்வொரு துறைக்காகவும் கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய, தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவனச் சபை மூலம் தீர்மானிக்கப்பட்டவாறு, நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடத்தப்படும் அபேட்சகர்களின் தகைமைகளை மதிப்பிடுவதற்கு எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவு அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் ரூபா 2,000 விண்ணப்பக் கட்டணம் ஒன்றை இலங்கை வங்கியின் தேசிய கல்வி நிறுவக கிளையின் பணிப்பாளர் நாயகத்தின் 607626 கொண்ட கணக்கிற்கு வைப்பிட்டு அந்த பற்றுச்சீட்டை உங்களது அச்சு விண்ணப்பப் படிவத்திற்கு இணைத்து அனுப்புதல் வேண்டும்.

அரச கூட்டுத்தாபனம்/ சபை/ திணைக்களம்/ சட்டரீதியான நிறுவனம் அரச கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுபவராயின் மேலுள்ளவாறு குறித்த நிறுவன தலைவரினால் பரிந்துரை இன்றி அனுப்பும், குறித்த தகைமையை பூர்த்தி செய்யாத, முழுமை பெறாத மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலுள்ள வெற்றிடத்தை நிரப்பும் இறுதி முடிவு தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவனச் சபை வசமானது.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**